பக்கங்கள்:-19

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 19 | வியாழக்கிழமை | 04.01.2024 | அதிர்வு 156 |
|---|---|---|---|---|---|

## மத போதகர் ஜெரோம் பிணையில் விடுவிப்பு



மத போதகர் ஜெரோம் பெர்னாண்டோ கோட்டை நீதவான் நீதிமன்றத்தால் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். எவ்வாறாயினும் 05▶

# அதிவிசேட பாதுகாப்புடன் இன்று யாழில் வந்திறங்குகிறார் ரணில்

### எதிர்ப்புப் போராட்டத்துக்குத் தடை கோரிய மனு நிராகரிப்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க நான்குநாள் பயணமாக இன்று வடக்குக்கு வருகின்றார். அதிவிசேட பாதுகாப்புடன் இன்று பகல் யாழ்ப்பாணத்தில் அவர் வந்திறங்குகின்றார். 05▶



# இந்த வருடம் தேர்தல் நிச்சயம்; எதிர்கொள்ள இ.தொ.க. தயார்



### அமைச்சர் ஜீவன் அறிவிப்பு

“இவ்வருடம் தேர்தல் நிச்சயம் நடைபெறும். அது எந்தத் தேர்தலாக இருந்தாலும் அதனை எதிர்கொள்வதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தயாராகவே இருக்கின்றது.”

– இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அத்துடன், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கிடைக்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

கொழும்பிலுள்ள அமைச்சு அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 05▶

# ஒரே மாதிரி உயிரை மாய்த்த எழுவர்!

### மாலபே சம்பவம் தொடர்பில் வெளியாகும் பகீர் தகவல்கள்



கொழும்பு, மாலபே பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்ட நிலையில், மேலும் இருவர் அவ்வாறே தற்கொலை செய்து கொண்டுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் 05▶




தென்னிலங்கையின் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஒருவர் நேற்று மாலை கூறிய தகவல் இது.

தெற்கில் முக்கிய அரசியல் வட்டாரங்களில் மீண்டும் ‘தேசிய அரசு’ பற்றிய பேச்சு மும்முரமாக ஆரம்பித்திருக்கின்றதாம்..!

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தாண்டுவது தொடர்பில் தீர்க்கமான நடவடிக்கைகளையும் தீர்மானங்களையும் எடுத்து, பல 05▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# வரி அதிகரிப்பை அரசாங்கம் விருப்பத்துடன் செய்யவில்லை

## ஆஷூமாரசிங்க கூறுகிறார்



**“வரி அதிகரிப்பை அரசாங்கம் விருப்பத்துடன் செய்ய வில்லை. கடந்த அரசாங்கத்தின் தூரநோக்கற்ற தீர்மானங்களே வரி அதிகரிக்க காரணமாகும். 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் பெப்ரவரி முதலாம் திகதி முதல் வருமான வரி கோப்பு ஆரம்பிக்கும் அனைவரும் வரி செலுத்த வேண்டும் என்ற கருத்து பிழையானதாகும்”**

**- இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆஷூமாரசிங்க தெரிவித்தார்.**

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“ஜனவரி முதலாம் திகதியில் இருந்து நூற்றுக்கு 15 ஆக இருந்த வற்வரி நூற்றுக்கு 18ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக சில பொருள்களின் விலை மற்றும் சேவைக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் வருமான வரி கோப்பு ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் வருமான வரி கோப்பு ஆரம்பிப்பவர்கள் அனைவரும் வரி செலுத்த வேண்டும் என்பதல்ல.

அது தவறான கருத்து. மாறாக யாராவது எதிர்காலத்தில் வாகனம் அல்லது காணி வாங்குவதாக இருந்தால் அவரிடம் வருமான வரி இலக்கம் இருக்க வேண்டும்.

அதற்காகவே இதனைக் கட்டாயப்படுத்தி இருக்கிறோம். மாதத்துக்கு ஒரு லட்சம் ரூபாவுக்கு அதிக வருமானம் உள்ளவர்களே வரி செலுத்த வேண்டி ஏற்படுகிறது.

அத்துடன், வருமான வரி கோப்பு ஆரம்பிக்காதவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்படுவதாக சிலர் தெரிவித்து வருகின்றனர். அதில் எந்த உண்மையும் இல்லை.” – என்றார்.

# யாழ். மாவட்டத்தில் டெங்குவைக் கட்டுப்படுத்த தீவிர சோதனை நடவடிக்கைகள் முன்னெடுப்பு

## நேற்று 23 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல்




**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு பரவும் அபாயம் காணப்படும் பகுதிகளாக அடையாளம் காணப்பட்ட இடங்களில் சோதனை நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.**

**பிரதேச மட்டங்களில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இணைந்து விசேட வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.**

**இதன்போது, டெங்குப் பரவலுக்கு ஏதுவாக அபாயகரமான பகுதிகளாக அவதானிக்கப்பட்டுள்ள இடங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யும் நடவடிக்கை சுகாதார பரிசோதகர்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக யாழ் மாவட்ட பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

டெங்கு பரவும் அபாயகரமான இடங்களாக அடையாளம் காணப்பட்டமை தொடர்பில், யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் எட்டு பேர், கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 3 பேர் மற்றும் தெல்லிக்கழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருமாக 12 பேருக்கு எதிராக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று 23 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 10 பேர், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 05 பேர், யாழ்பபாணம் மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 04 பேர், கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேர் மற்றும் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர் என 23 பேர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, டெங்கு நுளம்பு பரவலுக்கு ஏதுவான இடங்களாக அவதானிக்கப்பட்டதன் அடிப்படையில் நேற்றைய தினம் 189 பேருக்கு எச்சரிக்கை நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் டெங்குப் பரவலை கட்டுப்படுத்தும் வகையில் இவ்வாறான சட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து முழு வீச்சில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என யாழ் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் ஆறுமுகம் கேதீஸ்வரன் மேலும் தெரிவித்துள்ளார்.



# தவறான பொருளாதாரத் தீர்மானங்களை எடுப்பதன் மூலம் ரூபாவின் பெறுமதி மீண்டும் வீழ்ச்சியடையும்

## ஜனாதிபதி ரணில் சுட்டிக்காட்டு

எரிபொருள் இல்லாத, உரம் இல்லாத, வீழ்ச்சியடைந்த பொருளாதார யுகத்துக்கு நாட்டை மீண்டும் கொண்டு செல்ல முடியாது என்றும், கடினமாக இருந்தாலும் இந்தப் பாதையில் செல்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை விரைவாக பலப்படுத்த முடியும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தவறான பொருளாதாரத் தீர்மானங்களை எடுப்பதன் மூலம் ரூபாவின் பெறுமதி மீண்டும் வீழ்ச்சியடையும் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, சிலர் கூறுவது போன்று பிரபலமான தீர்மானங்களை மேற்கொண்டு நாட்டின் எதிர் காலத்தை இருளடையச் செய்யத் தாம் தயாரில்லை என்றும் வலியுறுத்தினார்.

சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி நிலையத்தில் நேற்று நடைபெற்ற “ஷில்ப அபிமானி 2023” ஜனாதிபதி கைவினைப் பொருட்கள் விருது வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.







நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும் மக்களுக்கு எதிர்வரும் காலத்தில் சகலவிதமான நிவாரணங்களையும் வழங்குவதாகத் தெரிவித்த ஜனாதிபதி, கைவினைத் துறையை அந்நிய செலாவணியை ஈட்டும் துறையாக மாற்றுவதற்கு அரசாசு தேவையான அனைத்து ஆதரவையும் வழங்கும் என்றும் தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி கூறியதாவது:-

“2023ஆம் ஆண்டு கைவினைத் துறையில் திறமையை வெளிப்படுத்தியவர்கள் அடையாளங்காணப்பட்டு அவர்களுக்கு விருது வழங்கப்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக நாட்டில் நிலவிய நெருக்கடி காரணமாக இந்த விருது விழாவை நடத்த முடியாமல் போனது. ஆனால் இந்தக் இக்கண்காட்சியில் கலைஞர்களின் திறமைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் துறையை எவ்வாறு மேம்படுத்துவது என்பதில் கவனம் செலுத்த வேண்டும். இலங்கை பாணிகளை மட்டுமன்றி மேற்கத்திய பாணிகளையும் பயன்படுத்தி நாம் பயனடைய வேண்டும். அதை இந்தியா ஏற்கனவே வெற்றிகரமாக செய்து வருகிறது. அதையும் நாம் கவனிக்க வேண்டும். இந்த திட்டங்கள் ஊடாக நாட்டின் வருமானத்தை அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்றுமதி துறையில் கவனம் செலுத்த வேண்டும். ஏற்றுமதித் தொழிலில் இருந்து விலகிச் செயல்படுவது இன்று ஒரு நாடாக நமக்கு மிகவும் கடினமான விடயமாகும். அதனாலேயே எதிர்காலத்தில் இந்த கைவினைத் துறையை மேம்படுத்துவதற்கும் வெளிநாட்டு தொழில்நுட்ப அறிவைப் பெறுவதற்கும் அவர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கும் தேவையான ஒத்துழைப்பை வழங்க அரசாங்கம் தயாராக உள்ளது .

நாங்கள் மிகவும் கடினமான காலத்தை கடந்துள்ளோம். அந்த இக்கட்டான நேரத்திலும் எப்படியாவது நாட்டின் வருமானத்தை பெருக்கினோம். அதற்காக அமைச்சர், இராஜாங்க அமைச்சர் மற்றும் உங்கள் அனைவரையும் நான் பாராட்டுகின்றேன். 2022 ஆம் ஆண்டில், நமது நாட்டின் பொருளாதாரம் முற்றிலும் வீழ்ச்சியடைந்தது. சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவது தடைப்பட்டது. இந்த கைவினைத் துறை சுற்றுலாத் துறையை நம்பியே உள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தைப் பாதுகாத்து முன்னேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருந்தது. அதன்படி, சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் நமது பொருளாதாரத்தை மறுசீரமைக்கும் வாய்ப்பு எங்களுக்கு கிடைத்தது.

2022 இல் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாது என்பதை கூறியிருந்தோம். அதன் காரணமாக, சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாட்டை எட்ட வேண்டியிருந்தது. அதனால் தான் நட்டத்தில் இயங்கும் துறைகள் அனைத்தையும் இலாபகரமான துறைகளாக மாற்றி சில நிவாரணங்களை குறைக்க நேரிட்டது.

அதன்படி கடந்த வருடத்தின் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகளில் பொருளாதார ரீதியாக ஓரளவு முன்னேற்றம் காண முடிந்தது. கடந்த வருடத்தின் கடந்த 02 காலாண்டுகளின் முன்னேற்றம் மற்றும் இந்த வருடத்தின் 04 காலாண்டுகளின் முன்னேற்றம் குறித்து நாம் இப்போது கவனம் செலுத்தி, இந்த வருடம் 2மூ பொருளாதார வளர்ச்சியை அடைய திட்டமிட்டுள்ளோம். இந்த ஆண்டு 2மூ பொருளாதார வளர்ச்சியை எட்டினால், அடுத்த ஆண்டில் 5% ஆக அதனை அதிகரிக்க முடியும். எனவே இந்த பொருளாதார வளர்ச்சியுடன் நாம் முன்னேற வேண்டும். நாம் உடன்பாட்டுடன் செயல்பட வேண்டும்.




நாங்கள் தொடர்ந்து பணத்தை அச்சடித்துக் கொண்டிருந்தது தான் எமக்கிருந்த பாரிய பிரச்சினையாகும். அத்தோடு வங்கிகளில் கடன் பெற்றதனால் ரூபாயின் பெறுமதி மேலும் சரிந்தது. அரசாங்கத்தின் தேவைக்காக

04▶








## தவறான பொருளாதாரத்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வங்கிகளில் கடன் பெற்று இரண்டு அரச வங்கிகளும் வீழ்ச்சியடையும் நிலைக்கு தள்ளப்பட்டன. எனவே, வங்கிகளில் கடன் பெற மாட்டோம் எனவும் பணத்தை அச்சிட மாட்டோம் என்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாடு மேற்கொள்ள வேண்டியிருந்தது. எனவே, அரசின் வருமானத்தை அதிகரிக்க வேண்டும்.

இந்த ஆண்டு மொத்த தேசிய உற்பத்தியின் ஊடாக 12% வருமானம் பெற வேண்டும். அதனை 15% இலக்குடன் நிறைவு செய்யவேண்டியுள்ளது. மொத்த தேசிய உற்பத்தியில் 15% வருமானத்தைப் பெற முடிந்தால் பொருளாதார ரீதியாக முன்னேறும் பலம் நமக்கு உண்டு.

நமக்கு பணத்தை அச்சடிக்க முடியாமலும், வங்கிகளில் கடன் பெற முடியாமலும் இருந்தால், அரச வருமானத்தை அதிகரிப்பதுதான் நமக்கு இருக்கும் ஒரே வழி. அதன்போது வற் வரியை அதிகரிக்க வேண்டி ஏற்பட்டது. அதன்படி, வற் வரி 15% இல் இருந்து 18% ஆக உயர்த்தப்பட்டது. மேலும், வற் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட பல பொருட்கள் வற் வரியின் கீழ் கொண்டு வரப்பட்டன.




அதன் மூலம் தற்போது நமக்குத் தேவையான வருமானம் கிடைக்கின்றது. இதனால், ரூபாவின் பெறுமதி வலுவடைகிறது. கடினமானாலும் அந்தச் சுமையை நாம் அனைவரும் சுமக்க வேண்டியுள்ளது. இந்த வழியில்தான் நாம் சிரமத்துடனேனும் செல்ல வேண்டும். அதை கைவிட்டால் நமக்கு எதிர்காலம் இல்லை.

மக்களுக்கு அனைத்து விதமான நிவாரணங்களையும் வழங்குவதற்கு நாங்கள் செயற்பட்டு வருகின்றோம். அரச ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குதல், "அஸ்வெசும" நன்மைகளை மூன்று மடங்காக அதிகரித்தல்,



மக்களுக்கு இலவச காணி உறுதிகள் வழங்குவது உள்ளிட்ட நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். மேலும், எதிர்காலத்தில் மேலும் நிவாரணம் வழங்கப்படும்.

இந்த வழியைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை. சிலர் பணத்தை அச்சிடுமாறும் வங்கிகளில் இருந்து கடன் பெறுமாறும் கூறுகிறார்கள். அப்படிச் செய்தால் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெற முடியாது. இந்தப் பயணத்தில் சிரமங்கள் இருந்தாலும், ஆண்டின் இறுதியில் ரூபாவின் பெறுமதி வலுவடையும்.

எனவே, இது ஒரு பிரபலமான வேலைத்திட்டம் அல்ல.




இதனைத் தவிர வேறு வழியில்லை. யாரேனும் நமக்கு சலுகை பெற முடியும் என்று கூறினால் அதனை முன் வந்து அறிவிக்க வேண்டும். அதே நேரத்தில், சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை எவ்வாறு பெறுவது என்பதையும் அவர்கள் அறிவிக்க வேண்டும். எரிபொருள் இல்லாத, உரம் இல்லாத, வீழ்ச்சி அடைந்த பொருளாதாரமற்ற யுகத்திற்கு எமக்கு மீண்டும் திரும்பிச் செல்ல முடியாது.

கடினமாக இருந்தபோதிலும், நாடு இப்போது வளர்ச்சியடைந்து வருகிறது. கடந்த ஆண்டு சுற்றுலாத்துறையில் முன்னேற்றம் ஏற்பட்டது. அதன்படி அத்துறையில் பணிபுரிபவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு, எதிர்காலத்தில் ஏனைய துறைகளில் உள்ள பிரச்சினைகளும் தீர்க்கப்படும்.



இருப்பினும், இந்த நேரத்தில் ரூபாவின் பெறுமதியை குறைக்க விரும்பவில்லை. உக்ரைன் போர் நடைபெறுகிறது. காசா போர் உள்ளது. அதன் மூலம் பொருட்களின் விலை அதிகரிக்கலாம். செங்கடலில் கப்பல்கள் மீது ஹூதி குழுவினர் நடத்தும் தாக்குதல்களால் கப்பல் போக்குவரத்து ஏற்கனவே நிறுத்தப்பட்டுள்ளது. இந்தக் கப்பல்கள் செங்கடல் ஊடாக பயணிக்காமல் தென்னாப்பிரிக்காவின் ஊடாக சுற்றி வந்தால் அதன் மூலம் பொருள்களின் விலை அதிகரிக்கும். எனவே, ஹூதி நடவடிக்கைகளுக்கு எதிரான பாதுகாப்பு செயற்பாடுகளுக்கு ஆதரவாக இலங்கை கடற்படையின் கப்பலை செங்கடலுக்கு அனுப்ப உடன்பட்டுள்ளோம்.

ரூபாவை வலுப்படுத்தி, சரியான பொருளாதார திட்டத்துடன் முன்னேறினால், விரைவாக முன்னேறும் திறன் நம்மிடம் உள்ளது. மேலும், இந்த கைவினைத் துறையும் அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் துறையாக மாற்றப்பட வேண்டும் என்பதையும், அதற்குத் தேவையான ஆதரவை வழங்க அரசாங்கம் செயல்பட்டு வருகிறது என்பதையும் நினைவூட்ட விரும்புகின்றேன்." – என்றார்.

கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பதிரண, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க, கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன், கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஜே.எம்.டி. ஜயசுந்தர, தேசிய கைவினைப் பேரவையின் தலைவர் சம்பத் எருஹெபொல, தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் லசந்த காரியப்பெரும மற்றும் வெளிநாட்டு உயர்ஸ்தானிகர்கள், தூதுவர்கள் மற்றும் துறைசார் நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தரப்புகளின் ஒத்துழைப்புகளையும் பெற்று, காரியமாற்ற வேண்டிய காலம் இது என்பது ஜனாதிபதியிலிருந்து சகல தரப்பினராலும் உணரப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்தக் காலத்தை ஒன்றுபட்டு எதிர்கொள்வதற்கு தேசிய அரசுத் திட்டம் முக்கியமானது என்று அரசுத் தலைமையும் உணர்ந்துள்ளதாம்.

நெருக்கடிகளை எதிர்கொள்வது குறித்து ஆராய்ந்து, கூட்டாகத் தீர்மானம் எடுப்பதற்காக சர்வ கட்சி மாநாட்டைத் தாமதமின்றிக் கூட்டும்படி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவும் இச்சமயத்தில் பொது அறிவிப்பை விடுகின்றார்.

தேசிய அரசு யோசனைக்கு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸா இணங்காவிட்டாலும் எதிரணியில் உள்ள பிற தரப்புகளையும் இணைத்து, தேசிய அரசை கொண்டு செல்வது காலத்தின் கட்டாயம் என்பதை ஜனாதிபதியும் உணர்ந்திருக்கின்றார் என்று அவருக்கு நெருக்கமான சில வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

தேசிய அரசு அமைக்கப்பட்டால் அதன் கீழ் அதிக எண்ணிக்கையான அமைச்சர்களை நியமிக்க முடியும் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

இப்போது எதிரணியில் இருக்கும் பலருக்கு தேசிய அரசில் அமைச்சர் பதவி என்ற வலையைப் போட்டு மடக்கி விடலாம் என ஜனாதிபதியின் தரப்பு கணக்கெடுக்கின்றதாம்.

எது,எப்படி என்றாலும் அடுத்த பத்து மாதங்களில் ஜனாதிபதி தேர்தல் நிச்சயம் நடத்தியாக வேண்டும். அதற்கிடையில் ஒரு தேசிய அரசு அமைப்பது தமது நகர்வுகளுக்கு சாதகமாக இருக்கும் என்று ஜனாதிபதியும் கருதுகின்றாராம்...!

## இந்த வருடம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நெருக்கடி நிலைமையில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்குக் கடந்த வருடம் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. 2022 காலப்பகுதியில் இருந்த நிலை தற்போது இல்லை. நாடு படிப்படியாக இயல்பு நிலைக்குத் திரும்பி வருகின்றது. இடைநிறுத்தப்பட்டிருந்த அபிவிருத்தித் திட்டங்களும் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்திய வீடமைப்புத் திட்டத்தையும் முன்னெடுத்து வருகின்றோம். காணி உரிமையும் பேசுபொருளாகஇருந்தது.அதனைப்பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல இந்திய அரசின் 3 ஆயிரம் மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் கல்வி மற்றும் சுகாதாரத்துக்கு முக்கியத்துவம் வழங்குவோம். இது பற்றி மக்களுக்கு விரைவில் தெளிவுபடுத்தப்படும்.

மலையக மக்களைக் கௌரவப்படுத்தும் விதத்தில் இந்திய அரசின் ஏற்பாட்டில் நினைவு முத்திரை வெளியிடப்பட்டது. இந்நிகழ்வில் இ.தொ.காவின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டிருந்தார்.

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் ஊடாக சிறார் போசாக்கு, இலவச உணவுத் திட்டம் எனப் பல திட்டங்களை அமைச்சின் ஊடாக முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம்.

"நாம் 200" நிகழ்வை வெற்றிகரமாக நடத்தினோம். இந்நிகழ்வில் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அம்மையார் பங்கேற்றிருந்தனர். அவருக்கு நன்றிகள். இந்நிகழ்வு மூலம் எமது மக்களுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது.

மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் வீதி அபிவிருத்தி உட்பட பல அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படும். 2023ஐ விட 2024 சிறப்பாக அமையும் என்ற நம்பிக்கை உள்ளது. ஏனெனில் உணவு பணவீக்கம் குறைவடைந்துள்ளது. பொருளாதார வளர்ச்சி நேர் பெறுமதியில் உள்ளது.

மக்கள் மீது விரும்பி வரி விதிக்கவில்லை. தற்போதைய சூழ்நிலையில் கட்டாயம் வரி செலுத்தப்பட வேண்டும். மீண்டும் நெருக்கடி நிலை ஏற்படாதிருக்க வேண்டுமென்றால் வரி அதிகரிப்பு கட்டாயம் அவசியம். உலக நிலைவரமும் இதில் தாக்கம் செலுத்தியுள்ளது. கடுமையான முடிவுகள் எடுக்கப்பட்டதால்தான் பணவீக்கத்தைக் குறைக்க முடிந்தது. இன்னும் 3, 4 மாதங்களில் சில பொருட்களின் விலைகள் குறையும் என நம்புகின்றோம்.

நீர்க் கட்டணம் தொடர்பான விலைசூத்திரம் இந்த மாதம் அறிமுகப்படுத்தப்படும். மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலேயே அந்தச் சூத்திரம் அமையும்.

இவ்வருடம் கட்டாயம் தேர்தல் நடக்கும். ஜனாதிபதித் தேர்தலாக இருந்தாலும், நாடாளுமன்றத் தேர்தலாக இருந்தாலும் அல்லது எந்தத் தேர்தலாக இருந்தாலும் அதனை எதிர்கொள்வதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தயார்." - என்றார்.

## அதிவிசேட பாதுகாப்புடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இந்நிலையில், ஜனாதிபதியின் யாழ். விஜயத்தின்போது எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதைத் தடுக்கக் கோரி பொலிஸார் தாக்கல் செய்திருந்த மனுவை யாழ். நீதிவான் நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

சட்டத்தை மீறாத வகையில், ஜனநாயக ரீதியில் எதிர்ப்பில் ஈடுபடுவதற்கான உரிமை உள்ளது என்று நீதிமன்றம் இதன்போது அறிவித்துள்ளது.

ஜனாதிபதியின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவதற்குத் தடை விதிக்கக் கோரியே யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், தவத்திரு வேலன் சுவாமிகள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நீதிமன்றம் நேற்றுமுன்தினம் பிறப்பித்திருந்த உத்தரவுக்கு அமைய மனுவின் 8 ஆவது பிரதிவாதியான தவத்திரு வேலன் சுவாமிகள் நீதிமன்றத்தில் நேற்று ஆஜராகி தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மத போதகர் ஜெரோம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அவர் வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மத போதகர் ஜெரோம் பெர்னாண்டோ கடந்த வருடம் மே மாதம் பிற மதங்கள் குறித்து அவதூறான கருத்துக்களை வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருந்தார். வெளிநாடு சென்றிருந்த அவர் நாடு திரும்பியிருந்த நிலையில் கடந்த டிசம்பர் மாதம் முதலாம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், அவர் 5 இலட்சம் ரூபா பிணை மற்றும் தலா ஒரு கோடி ரூபா பெறுமதியான இரண்டுசரீரப் பிணைகளில் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளார்.

## ஒரே மாதிரி உயிரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், மக்களுக்கு முக்கிய எச்சரிக்கையொன்றையும் விடுத்துள்ளனர்.

மூட நம்பிக்கை தொடர்பில் கருத்துகளை விதைத்து தற்கொலை ஊக்குவிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்தும் விசாரணை இடம்பெறுகின்றது.

நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரின் சடலங்கள், மாலபே பகுதியில் டிசம்பர் 30 ஆம் திகதி அதிகாலை மீட்கப்பட்டுள்ளன.

35 வயதுடைய தாய், 9 மற்றும் 7 வயதுகளுடைய இரு மகன்மார் மற்றும் 6 வயதுடைய மகள் ஆகியோரே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டனர்.

டிசம்பர் 28 ஆம் திகதி குடும்பஸ்தர் ஒருவர் நஞ்சு அருந்தி தற்கொலை செய்துகொண்டுள்ளார். அவரின் இறுதிக் கிரியைகள் டிசம்பர் 29 ஆம் திகதி நடந்துள்ளன.

இந்தநிலையில், கணவரின் உயிரிழப்பால் ஏற்பட்ட மன அழுத்தம் காரணமாக மனைவி, 3 பிள்ளைகளுக்கும் நஞ்சைக் கொடுத்து, தானும் தற்கொலை செய்துக் கொண்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டிருந்தனர்.

பொலனறுவைப் பகுதியில் உள்ள காணியை விற்பனை செய்து விட்டு இவர்கள் குடும்பமாக வெளிநாடு செல்வதற்கும் முற்பட்டுள்ளனர் எனவும் கூறப்பட்டது.

இந்நிலையில், ஹோமாகம பகுதியில் வாடகை வீடொன்றில் இவர்கள் தங்கியுள்ளனர். அந்த வீட்டில் வைத்தே குடும்பஸ்தர் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

அவரின் இறுதிச்சடங்கு மாலபே பகுதியில் உள்ள அவரின் சகோதரரின் வீட்டில் நடந்தது. அந்த வீட்டில் வைத்தே மனைவியும், 3 பிள்ளைகளும் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

ருவான் பிரசன்ன குணரத்ன என்ற 46 வயது நபர் (மேற்படி குடும்பத்தின் தலைவர்) ஆன்மீக போதனைகளில் ஈடுபட்டு வந்துள்ளார். மரணம் பற்றியே அவர் போதனைகளின்போது அதிகம் பேசியுள்ளார். இது தொடர்பான வீடியோக்கள் சமூகவலைத்தளங்களிலும் உள்ளன.

இவரின் இறுதிக்கிரியைகளில் பங்கேற்றிருந்த 35 வயது இளைஞர் ஒருவரும், 21 யுவதி ஒருவரும் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டுள்ளனர். அவர்களின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன. அவர்களும் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

மேற்படி நபரின் போதனைகளில் இவர்கள் இருவரும் பங்கேற்றுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

இவ்வாறு (நஞ்சருந்தி) தற்கொலை செய்து கொள்வதன் மூலம் அடுத்த ஜென்மத்துக்கு விரைவாகச் செல்ல முடியும் என்ற தவறான கருத்தை அவர் விதைத்துள்ளார் என்று புலனாய்வுப் பிரிவு முன்னெடுத்த விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தற்கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட நஞ்சு என்ன வகையைச்

06▶

## ஒரே மாதிரி உயிரை...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்தது என்பது தொடர்பில் இரசாயனப் பரிசோதனை இடம்பெறவுள்ளது.

அதேவேளை, குறித்த நபரின் போதனைகளில் எவரேனும் பங்கேற்றிருந்தால் அவர்கள் தொடர்பில் குடும்ப உறுப்பினர்கள் அவதானத்துடன் இருக்குமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். இது தொடர்பில் விசாரணைகள் தொடர்கின்றன.

(குறிப்பு:- தற்கொலை என்பது எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு அல்ல. மூடநம்பிக்கைக்கு அடிபணிந்து தற்கொலை செய்துகொள்வது கோழைத்தனமான முடிவாகும். பொறுப்பும், பொதுநலன் கருதியுமே இந்தச் செய்தி பிரசுரமாகியுள்ளது.)




## இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
## இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம்
## இணைந்து



### "தாயகஒலி" பிரதம ஆசிரியர்

***தம்பு சிவா அவர்களின் (தம்பு.சிவசுப்பிரமணியம்)***

**(அகவை 80) அமுத விழாவை முன்னிட்டு**

நடத்தும்

## சிறுகதைப் போட்டி

இருபிரிவுகளாக நடத்தப்படும்

**(பரிசுத் தொகை 1 இலட்சம்)**

1. சிறுகதைப் போட்டி சகலருக்குமானது
2. பாடசாலை மாணவர்களுக்கான திறந்த போட்டி

* போட்டிக்கான படைப்புகள் அனைத்தும் சொந்தப்படைப்பாக அமைய வேண்டும். ஏற்கனவே வெளிவந்தபடைப்புக்கள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது.
* பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கப்படைப்புகள் யாவும் அப் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
* 2024ம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் (15.02.2024) திகதிக்கு முன் படைப்புகளை அனுப்பி வைக்க வேண்டப்படுகின்றீர்கள்.
* **நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.**

***அனுப்ப வேண்டிய முகவரி :***

இணைப்பாளர்
இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
இல. 9 - 2/1 நெல்சன் பிளேஸ்
கொழும்பு 06.
தொடர்புகளுக்கு 0771 877 999, 011 2364124

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பொருளாதார நெருக்குவாரம்

பொருளாதார நெருக்கடியில் வீழ்ந்த நாட்டைக் காப்பாற்றக் கூடிய மீட்பர் தாமே என்று பீற்றி, பிரகடனப்படுத்திக் கொண்டு அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அந்தப் படத்தை வைத்துக் கொண்டே அடுத்த தடவையும் ஐந்து முழு ஆண்டுகளுக்கு நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவியில் முழுமையாக கோலோச்சலாம் என்று கனவு கண்டார். ஆனால் அந்த நினைப்பு பகல் கனவாகும் சூழல் தென்படத் தொடங்கியுள்ளது.

நாடு பொருளாதாரத்தில் பெரும் சரிவில் சிக்கிக் கிடக்கின்றது. அதிலிருந்து மீள வேண்டும் என்றால் கொஞ்சக் காலத்துக்கு மக்கள் கஷ்டங்களை - நெருக்கடிகளை - சுமக்கத்தான் வேண்டும் என்று உபதேசித்த அவர், அந்தக் கஷ்டங்களை ஒரேடியாகக் கடந்த திங்களன்று பிறந்த புது வருடத்தோடு மக்கள் மீது கொண்டு வந்து சுமத்தியிருக்கின்றார்.

ஆனால் மக்களும், ஏனைய அரசியல் கட்சிகளும், பொது அமைப்புகளும் இலகுவில் அதனை ஒப்புக்கொண்டு, பாடுகளைச் சுமக்கத் தயாராக இல்லை என்றே தெரிகின்றது.

ரணில் அரசின் வரிவிதிப்புகளுக்கு எதிராக மக்களின் கருத்து நிலை பெரும் எதிர்ப்பாகப் பீறிட்டு வருவது துலாம்பரமாகத் தெரிகின்றது.

அறகலய காலத்தில் மக்கள் எதிர்ப்பு எப்படி மெல்ல மெல்ல வெளிப்பட்டு, சூடு பிடிக்கத் தொடங்கியதோ அது போன்ற ஆரம்பக்கட்ட எதிர்ப்புணர்வு தென்னிலங்கையில் மெல்லப் படர்ந்து பரவத் தொடங்கியிருப்பது ஊடகத் தரப்புகளினால் அவதானிக்கப்பட்டிருக்கின்றது.

சில துறைகளில் துளிர்விடத் தொடங்கி உள்ள அரசியல் போராட்டங்கள், ஏற்கனவே கனன்று கொண்டிருந்த தணலை ஊதி எரியவிடும் எத்தனமாகவே தோன்றுகின்றன. அந்தத் தொழிற்சங்கப் போராட்டத் தீ மெல்லப் பற்றி எரிய ஆரம்பித்து, பெரிய சுவாலையாக விளாசி எரிந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அதற்கான களச் சூழ்நிலையும் வாய்ப்புகளும் தாராளமாகவே தென்படுகின்றன.

வரிவிதிப்புகளினால் ஏற்பட்டுள்ள நெருக்கடி மக்கள் மத்தியில் எதிர்ப்புப் போராட்டங்களை இலகுவாகத் தூண்டி மக்களைக் கிளர்ந்தெழ வைத்து விடும் என்பது கண்கூடு.

பல சேவைகளை அத்தியாவசிய மானவையாகப் பட்டியலிட்டுப் பிரகடனப்படுத்தி, வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. மோசமடையக் கூடிய நிலைமைகளை எதிர்கொள்வதற்கான அரசின் தயார்படுத்தல் தான் இந்த அறிவிப்புகள்.

குறிப்பாக மின்சார சபை ஊழியர்களின் போராட்டம் தாக்கத்தை ஏற்படுத்த வல்லது. அதனால் மின்சார சபை ஊழியர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதைக் கூடக் கட்டுப்படுத்தும் விதத்திலான சுற்றுநிருபம் மின்சார சபை ஊழியர்களுக்கு நிர்வாகத்தினால் வழங்கப்பட்டிருக்கின்றது.

பொருளாதார விடயங்களை ரணில் அரசு கையாளும் முறைமை தொடர்பில் மக்கள் மத்தியில் அதிருப்தி வளர்ந்து வருவது வெளிப்படையானது. பொலிஸார் மற்றும் படையினர் மூலமும், கடுமையான சட்டங்கள், வர்த்தமானி பிரகடனங்கள் போன்றவை வாயிலாகவும் மக்களின் போராட்ட எழுச்சியை இரும்புக் கரம் கொண்டு அடக்குவதற்கு ரணிலின் அரசு முனைப்போடு நிற்கின்றது என்பதும் வெளிப்படையானது.

நிறைவேற்றதிகாரம் கையில் இருக்கின்றமையால், முன்னைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ போன்றே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அடக்கு முறையை ஏவி விட்டு, இங்கு எழக்கூடிய மக்கள் கிளர்ச்சியை அடக்கி விடலாம் என்று கனவு காண்கின்றார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி சம்பந்தப்பட்ட விடயங்களைக் கையாள்வது தொடர்பில் எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து விரிவாகக் கலந்துரையாடி, அவற்றினதும் கருத்துக்களையும் உள்வாங்கி, அவற்றையும் அரவணைத்து, ஒன்றுபட்ட ஆட்சி முறைப் போக்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுப்பாராயின் சுலபமாக இத்தகைய பிரச்சினைகளை அவரால் தீர்க்க முடியும். அப்படி சகலரையும் அரவணைத்துக் கையாளும் பண்புதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இல்லையே...!

அதனால் அவரும் நாடும் சில நெருக்கடிகளை - குழப்பங்களை - நாட்டுக்குள் எதிர்கொண்டு சந்தித்துத்தான் நிமிர வேண்டி நேரும்.

# எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. கூட்டணி வெல்வது நிச்சயம்

## - முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் நம்பிக்கை



"பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தபோது அரசியல் எதுவும் பேச வில்லை. மக்களவைத் தேர்தல் என்பது இந்திய பிரதமரை தேர்வு செய்கிற தேர்தல். அந்தத் தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான கூட்டணிதான் நிச்ச யமாக வெற்றி பெறும். மூன்றாவது முறையாக நரேந்திர மோடி நாட்டின் பிரதமராக வருவார்"

– இவ்வாறு முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் நம்பிக்கை தெரி வித்துள்ளார்.

சென்னையில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் நேற்று செய்தியாள ர்களைச் சந்தித்தார். இதன்போது அவர் கருத்து தெரிவிக்கையில்,

"நான் கட்சியில் இருந்தபோது, அநியாயமாக நடந்த பொதுக்குழு விலும், கட்சியினுடைய வரவு செலவு கணக்கு களை என்னை வாசிக்கவிடாமல் அந்தக் கூட்டத்தை நடத்தி முடித்துவிட்டனர்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி பொறுப்பேற்றதில் இருந்து, கட்சியின் பொருளாளராக சீனிவாசன் பொறுப்பேற்றதில் இருந்து அ.தி.மு.கவின் வரவு செலவு கணக்கு விவரங்களை நாங்கள் நீதிமன்றத்தின் வாயிலாக கேட்கப்போகிறோம். அதற்கு அவர்கள் உரிய பதிலளிக்க வேண்டும்.

திருச்சி வந்த பிரதமரை சந்திப்பதற்கு வாய்ப்புக் கேட்டிருந்தேன். பிரதமரை வரவேற்கவும், வழியனுப்பவும் அனுமதி கொடுத்தனர்.

மனநிறைவோடு அதை நானும் செய்தேன். இந்தச் சந்திப்பில், அரசியல் எதுவும் இல்லை. அவர் நலமுடன் இருக்க வேண்டும் என்பதற்கான வாழ்த்துக் கடிதத்தைக் கொடுத்தேன். வாய்ப்புகள் வரும்போது உறுதியாக டில்லிக்குச் செல்வேன்.

இந்த நிமிடம் வரை பா.ஜ.கவுடன் தொடர்பில் இருக்கிறேன். மக்களவைத் தேர்தல் என்பது இந்திய பிரதமரை தேர்வு செய்கிற தேர்தல். அந்த தேர்த லில் பா.ஜ.க. தலைமையிலான கூட்டணிதான் நிச்சயமாக வெற்றி பெறும்.

மூன்றாவது முறையாக நரேந்திர மோடி நாட்டின் பிரதமராக வருவார். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அ.ம.மு.கவுடன் இணைந்து தேர்தலை சந்திப்போம்" – என்றார்.

# அசாமில் பேருந்து விபத்து: 14 பேர் பலி, 30 பேர் காயம்




அசாம் மாநிலத்தில் அத்கேலியா கோலாகாட் பாலிஜான் நகரில் ஏற்பட்ட பேருந்து விபத்தில் 12 பேர் உயிரிழந்துள் ளனர். 30 பேர் காயமடைந்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

இந்த விபத்து நேற்று இடம்பெற்றுள் ளது. நிலக்கரி ஏற்றிச் சென்ற லொரி ஒன்று பேருந்துடன் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில், கோலாகாட் பொலிஸ் கண்காணிப்பாளர் ராஜேன் சிங் கூறுகையில், அந்த பேருந்தில் 45 பேர் இருந்தனர். அவர்கள் சுற்றுலா சென்று திரும்பிக்கொண்டிருந்தனர் என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன், அடர்ந்த மூடுபனி காரண மாக விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனவும் சரியான காரணத்தைக் கண்டறிய நாங்கள் அதை ஆராய்ந்து வருகிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# விபத்துக்குள்ளான எரிபொருள் தாங்கி: பாரிய தீ பரவல்



பஞ்சாப்பில் மேம்பாலம் ஒன்றின் எரிபொருள் தாங்கி ஒன்று விபத்துக்குள் ளாகியமையால் பயங்கர தீ விபத்தொன்று ஏற்பட்டுள்ளது.

இந்த தீ விபத்தானது நேற்று இடம் பெற்றுள்ளது.

மேலும், எரிபொருள் தாங்கி மேம் பாலம் நடுவே கவிழ்ந்தமையால் அதிலி ருந்த எரிபொருள் அனைத்தும் வீதியில் ஊற்றி கொழுந்து விட்டு எரிந்துள்ளது.

இந்த நிலையில், தீ விபத்து தொடர்பில் தகவல் கிடைத்ததும் தீயணைப்பு படையினர் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து தீயை கட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தனர். அதேவேளை, தீ விபத்து தொடர்பான புகைபடங்கள் மற்றும் காணொலிகள் சமூக வலைதளங்களில் பரவி வருகின்றன.

# ஈரானில் இரட்டை குண்டு வெடிப்பு: 103 பேர் பலி, 141 பேர் படுகாயம்!



ஈரானில் அடுத்தடுத்து நடந்த இரண்டு குண்டு வெடிப்பு சம்பவங்களில் 103 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 141 பேர் காயமடைந்துள்ளனர்.

கெர்மான் பகுதியில் உள்ள ஈரானின் முன்னாள் தளபதி காசிம் சுலைமானின் கல்லறை அருகே அடுத்தடுத்து குண்டுகள் வெடித்துள்ளன.

காசிம் சுலைமானின் நினைவு நாளை அனுசரிக்க ஏராளமானோர் கூடியிருந்தபோது, குண்டு வெடிப்பு சம்பவம் அரங்கேறியுள்ளது.

2020 ஆம் ஆண்டு அமெரிக்க வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்ட ஈரானின் இராணுவ ஜெனரல் காசிம் சுலைமானுக்கு நினைவஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

ஈரானின் தலைநகர் டெஹ்ரானில் இருந்து தென்கிழக்கே 820 கிலோ மீற்றர் தொலைவில் கெர்மானில் உள்ள




அவரது கல்லறைக்கு அருகில் இந்த குண்டுவெடிப்புகள் நிகழ்ந்துள்ளன.

# ஆப்கானிஸ்தானில் அடுத்தடுத்து நிலநடுக்கங்கள்: அச்சத்தில் மக்கள்



ஆப்கானிஸ்தானில் அரை மணி நேரத்தில் அடுத்தடுத்து இரண்டு நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

4.4 மற்றும் 4.8 எனும் ரிக்டர் அளவுகளில் நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன.

முதல் நிலநடுக்கமானது, பைசாபாத் நகரத்தில் இருந்து 126 கிலோ மீற்றர் தொலைவில் 80 கிலோ மீற்றர் ஆழத்தில், 4.4 ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளது.

இதைத் தொடர்ந்து, பைசாபாத் நகரத்தில் இருந்து 100 கிலோ மீற்றர் தொலைவில் 140 கிலோ மீற்றர் ஆழத்தில், 4.8 ரிக்டர் அளவில் இரண்டாவது நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

இதன்போது, குடியிருப்புகள் அதிர்ந்ததால் மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர்.

இதேவேளை, கடந்த ஜனவரி முதலாம் திகதி ஜப்பானில் ஏற்பட்ட தொடர் நிலநடுக்கங்களால் இதுவரை 62 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தென்னாபிரிக்காவை எதிர்ப்பதற்கு தயார்: இஸ்ரேல் அறிவிப்பு

சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாபிரிக்காவை எதிர்க்கத் தயாராக இருப்பதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

பலஸ்தீனத்தில் இஸ்ரேல் இனப்படுகொலை செய்துவருவதாக சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாப்பிரிக்கா வழக்கு தொடர்ந்திருந்தது.

சர்வதேச சட்டத்தை இஸ்ரேல் மீறுவதாக குற்றம் சாட்டிய தென்னாபிரிக்கா, இஸ்ரேல் காசா மீதான தாக்குதல்களை நிறுத்த ஆணை பிறப்பிக்குமாறு நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் விடுத்தது.

ஒக்டோபர் 7 இல் ஹமாஸ் நடத்திய தாக்குதல்களை அரசியல் மற்றும் சட்டத்தைக் கொண்டு மறைக்கும் முயற்சி இது என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளார். தென்னாபிரிக்காவின் இந்த அபத்தமான குற்றச்சாட்டை சர்வதேச நீதிமன்றத்தில் எதிர்க்கவிருப்பதாக செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

# ஜனாதிபதித் தேர்தலில் இறங்கும் திலித் ஜயவீர

## நிறுவன தலைவர் பதவிகளை இராஜினாமா



பிரபல தொழிலதிபர் திலித் ஜயவீர, 2024 ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் அவர் தலைவர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினராக உள்ள அனைத்து நிறுவனங்களிலிருந்தும் இராஜினாமா செய்துள்ளார்.

'தெரண' தொலைக்காட்சியை நடத்தி வரும் 'பவர்ஹவுஸ்' நிறுவனம், 'அருணா' நாளிதழை நடத்தி வரும் 'லிபர்ட்டி பப்ளிஷர்ஸ் பிரைவேட் லிமிடெட்' உள்ளிட்ட 24 நிறுவனங்களில் இருந்து அவர் இராஜினாமா செய்துள்ளார்.

முழு நேர அரசியலில் பிரவேசித்துள்ள திலித் ஜயவீர எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் 'மவ்பிம ஜனதா கட்சியின்' தலைவராகப் போட்டியிடத் தீர்மானித்துள்ளார்.

அதற்கான பிரச்சாரங்களை அவர் நாடு முழுவதும் தீவிரப்படுத்தியுள்ள பின்புலத்திலேயே தாம் வகித்த அனைத்துத் தலைவர் பதவிகளையும் இராஜினாமாச் செய்துள்ளார்.



# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த இருவர் கோப்பாய் பகுதியில் கைது

யாழ்ப்பணம் கோப்பாய்ப் பகுதியில் நீண்ட காலமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த ஆண் ஒருவரும் பெண்ணொருவரும் பொலிஸாரின் விசேட சுற்றி வளைப்பின்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீண்ட நாள்களாகக் கசிப்பு உற்பத்தியில் இவர்கள் ஈடுபட்டு வருகின்றனர் எனப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து நேற்று விசேட சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.



இதன்போது அந்த இருவரிடமிருந்தும் 15 லிட்டர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்குக் கீழ் இயங்கும் விசேட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் இந்தக் கைது மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### மட்டு. பிறைந்துறைச்சேனையில்

# போதைப் பொருள் வியாபாரிகளின் வீடுகளில் அதிரடிப்படை முற்றுகை!

### ஐஸ், ஹரோயின் மீட்பு; மூவர் கைது





(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள பிறைந்துறைச்சேனையில் போதைப்பொருள் வியாபாரிகளது வீட்டை நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை இரவு விசேட அதிரடிப்படையினர் முற்றுகையிட்டு சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன் போது 980 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 40 மில்லி கிராம் ஹெரோயின் ஆகியவற்றுடன் 3 பேரைக் கைது செய்தமையுடன் 12 லட்சத்து 22 ஆயிரத்து 300 ரூபா பணத்தையும் இரண்டு கையடக்கத் தொலை பேசிகளையும் மீட்டனர் எனவும் வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றையடுத்தே விசேட அதிரடிப்படைத் தளபதி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தரவின் ஆலோசனையின் கீழ் அம்பாறை மட்டக்களப்பு பிராந்திய கட்டளைத் தளபதி உதவிப் பொலிஸ் பணிப்பாளர் வாவிடவிதானவின் வழிகாட்டலில் வாழைச்சேனை கடதாசி ஆலை முகாம் பொறுப்பதிகாரி கே.ஜி. லக்கல்குமார தலைமையிலான விசேட அதிரடிப்படையினர் இந்நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பிறைந்துறைச் சேனையிலுள்ள 3 போதை பொருள் வியாபாரிகளின் வீட்டை செவ்வாய் இரவு முற்றுகையிட்டு சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதில் கைது செய்யப்பட்வர்களையும் சான்று பொருள்களையும் விசேட அதிரடிப் படையினர் தம்மிடம் ஒப்படைத்துள்ளனர் எனவும், இவர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# மயானத் தொழிலாளி மயானத்தில் தூக்கில்

### மட்டு. கள்ளியங்காட்டில் சம்பவம்



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கள்ளியங்காடு இந்து மயானத்திலுள்ள கட்டடத்தின் கூரையில் அங்கு கடமையாற்றிவரும் ஆண் ஒருவர் நேற்றுப் புதன்கிழமை பகல் தூக்கில் தொங்கி தற்கொலை செய்து கொண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இருதயபுரம் இரண்டாம் குறுக்கு வீதியை சேர்ந்த 47 வயதுடைய ஐந்து பிள்ளைகளின் தந்தையான கிலெனி அலோசியஸ் என்பவரேஇவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் வழமைபோல மாயானத்தில் கடமையாற்றச் சென்றிருந்த நிலையில் நேற்றுப் பகல் 2 மணியளவில் அங்கு அமைக்கப்பட்டிருந்த கட்டடத்தின் கூரையில் கயிறுட்டு தூக்கில் தொங்ககி தற்கொலை செய்து கொண்டுள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பக்-கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளை மட்டு தலைமையக பெரும் குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக்குழு கூடியது

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக்குழுவின் 2024 ஆம் ஆண்டிற்கான முதலாவது கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாயன்று மாவட்ட மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அபிவிருத்திக்குழுவின் இணைத் தலைவர்களான கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துக்கோரள,அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அத்தாவுல்லா ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மாவட்டத்தின் கல்வி, விவசாயம்,குடிதண்ணீர் தொடர்பிலான பிரச்சினைகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ்.தௌபீக்,இம்ரான் மஹ்ரூப் மற்றும் மாகாண, மாவட்ட அரச திணைக்களத் தலைவர்கள் உடன் மாவட்ட அரசாங்க அதிபர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.








# கட்டுநாயக்க விமான நிலையத்தில் மற்றுமொரு பயணிகள் முனையம்

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் மற்றுமொரு பயணிகள் முனையத்தை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது.

விமான நிலையத்தில் நிலவும் பயணிகள் நெரிசலைக் குறைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.



# ‘யுக்திய’ சுற்றிவளைப்பில் மேலும் 1,182 பேர் கைது!

‘யுக்திய’ சுற்றிவளைப்பினூடாக மேலும் 1,182 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 44 சந்தேகநபர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருளுக்கு அடிமையான 44 பேரை புனர்வாழ்வு மத்திய நிலையங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுளளது.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப்பிரிவு மற்றும் விசேட பிரிவில் ஆவணப்படுத்தப்பட்டுள்ள சந்தேகநபர்கள் பட்டியலில் 138 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யுக்திய சுற்றிவளைப்பிற்கு இணையாக குருநாகல் மல்கடுவாவ பண்டாரநாயக்கபுர பகுதியில் நேற்று அதிகாலை விசேட சுற்றிவளைப்பொன்று முன்னெடுக்கப்பட்டது.

பொலிஸ் விசேட அதிரப்படையினர் குருநாகல் பிராந்தியத்திலுள்ள சகல பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸார் இந்தச் சுற்றிவளைப்பில் பங்கேற்றனர்.

கஞ்சா, ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருள்களைத் தம்வசம் வைத்திருந்த 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



# உரக் கொடுப்பனவிற்காக நிதி வழங்கக் கோரிக்கை

பெரும்போகத்தில் உரக் கொள்வனவிற்காக விவசாயிகளுக்கு வழங்குவதற்காக கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு நிறைவடைந்துள்ளது.

இதற்காக மேலும் இரு நூறு கோடி ரூபா நிது திறைசேரியிடமிருந்து கோரியுள்ளதாக திணைக்களம் தெரிவித்தது.

இந்த நிதி கிடைத்ததும் உடனடியாக அதனை விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கமநல அபிவிருத்தி திணைக்களம் கூறியுள்ளது.

தற்போது வரை விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் ஐந்நூறு கோடி ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது.

583,372 விவசாயிகளுக்கு இந்த நிதி விடுவிக்கப்பட்டுள்ளது என கமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெரும்போகப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளில் 50 வீதமானோருக்கு மாத்திரமே இதுவரை கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.




# கீரி சம்பா அரிசி இறக்குமதிக்கு தனியார் துறையினருக்கு அனுமதி

கீரி சம்பா அரிசியை இறக்குமதி செய்வதற்காக தனியார் துறைக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினூடாக அரிசியை இறக்குமதி செய்தால், கொள்முதல் நடவடிக்கைகளுக்கு அதிக காலம் செல்லும் என அரச வணிகக் கூட்டுத் தாபனத்தின் தலைவர் ஆசிறி வலிசுந்தர தெரிவித்துள்ளார்.

தனியார் துறைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் குறித்த அரிசி தொகை விரைவில் கிடைக்கும் என வர்த்தக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கீரி சம்பா அரிசி இறக்குமதி அண்மையில் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# மின்சார சபை ஊழியர்களின் விடுமுறைகள் உடன் இரத்து

இலங்கை மின்சார சபை ஊழியர்களின் விடுமுறைகள் மறு அறிவித்தல் வரை இரத்து செய்யப்பட்டுள்ளன.

மின்சார சபையின் பதில் பொது முகாமையாளர் வெளியிட்டுள்ள சுற்று நிருபத்திற்கு அமைவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மின் விநியோகத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கான தேசிய கடமை தொடர்பில் கவனம் செலுத்தி இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலங்கை மின்சார சபையின் பணியாளர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்த கட்டுப்பாடு

இலங்கை மின்சார சபை ஊழியர்கள் சமூக ஊடகத்தைப் பயன்படுத்தக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இலங்கை மின்சார சபையின் பதில் பொது முகாமையாளரின் கையொப்பத்துடன் ஊழியர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றுநிருபத்தின் ஊடாக கட்டுப்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு அமைய, மின்சார சபையின் எந்த ஊழியரும் எந்தவொரு காரணத்திற்காவும் சமூக ஊடகங்களில் தமது உத்தியோகபூர்வ தகவல்களைப் பயன்படுத்த முடியாது.

மின்சார சபையின் இரகசியத் தகவல்களை வெளிப்படுத்துவதும் அவதூறு, பாலியல், அரசியல் அல்லது அதனுடன் தொடர்புடைய வேறு விடயங்களை சமூக ஊடகங்களில் பதிவிடுவதும் மின்சார சபையின் ஒழுக்க விதிகளுக்கு முரணானவை என சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடிய தவறான தகவல்கள், நிறுவனத்திற்கு அவதூறு ஏற்படுத்தும் கருத்துகளை ஏதேனும் ஒரு ஊழியர் வெளியிடுவது பாரதூரமான குற்றம் என பதில் பொது முகாமையாளர் கலாநிதி நரேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

அத்தகைய தகவல்களை சமூக ஊடகங்களில் தரவேற்றம் செய்யவும் இடுகை செய்யவும், மீளனுப்பவும், பகிரவும் கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளது.

நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ள கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்தி பல்வேறு குழுமங்களை ஏற்படுத்தி தகவல்கள் பகிரப்படுகின்றமை தொடர்பில் இலங்கை மின்சார சபை தனது ஊழியர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

சமூக ஊடகங்கள் ஊடாக வெளி தரப்பினருக்கு நிறுவனத்தின் தகவல்களை அநாவசியமான முறையில் வெளிப்படுத்துவதன் ஊடாக நிறுவனத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுவதை தவிர்ப்பதற்காகவே மேற்படி சுற்றுநிருபம் விடுக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஒன்றிணைந்த மின்சார தொழிற்சங்கத்தின் 3 நாள் தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பம்



இலங்கை மின்சார சபையை ஆறாகப் பிரித்து நிறுவன சட்டத்தின் கீழ் பதிவு செய்யக்கூடிய வகையிலான நிறுவனத்தை உருவாக்குவதற்கு ஏதுவான இலங்கை மின்சார சட்டத்திற்கு எதிராக ஒன்றிணைந்த தொழிற்சங்கம் மூன்று நாள் தொழிற்சங்க நடவடிக்கையை நேற்று ஆரம்பித்தது.

இந்த நிலையில், இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்க நடவடிக்கையைத் தடுப்பதற்கு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் கஞ்சன விஜேசேகர நடவடிக்கை எடுத்துள்ளார்.

உத்தேச சட்டமூலத்தை வாபஸ் பெறுமாறு வலியுறுத்தி ஒன்றிணைந்த தொழிற்சங்கம் இலங்கை மின்சார சபையின் பிரதான நுழைவாயிலுக்கு முன்பாக நேற்று மதியம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

மூன்று நாள்களை எதிர்ப்பிற்கான காலமாக அறிவித்துள்ள இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தினர் கொழும்பு கோட்டையில் உள்ள பிரதான அலுவலகத்திற்கு முன்பாக நேற்று மதியம் ஒன்று கூடினர்.

உத்தேச மின்சார சட்டத்தை நடைமுறைப்படுத்தினால், இலங்கை மின்சார சபையை பகுதிகளாக பிரித்து விற்கும் நிலைமை ஏற்படுமென அவர்கள் சுட்டிக் காட்டினர்.

ஆர்ப்பாட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் பொலிஸார், பொலிஸ் கலகத் தடுப்பு பிரிவினர், கடற்படையினர் இலங்கை மின்சார சபையின் பிரதான நுழைவாயில் அருகில் அழைக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை, இலங்கை மின்சார சபையின் சேவைகளுக்கு இடையூறு விளைவிக்கும் அல்லது அதன் நிர்வாகத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களை மீறும் எந்தவொரு ஊழியரையும் பணி இடைநீக்கம் செய்யுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மின்சார சபையின் உத்தேச சீர்திருத்தங்கள் நாடாளுமன்ற அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என அவர் தனது எக்ஸ் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மின்சாரக் கட்டணத்தை குறைப்பதற்கான முன்மொழிவுகளும் அடுத்த வாரம் பொது பயன்பாடுகள் ஆணைக் குழுவில் சமர்ப்பிக்கப்படும் என கஞ்சன விஜேசேகரவின் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுகயீன விடுமுறையில் குதித்து போராட்டத்தில் ஈடுபடுவோம்!

## மின்சார சேவை ஊழியர் சங்கத்தினர் எச்சரிக்கை

மின்சார சபையின் சகல ஊழியர்களின் விடுமுறைகளையும் இரத்து செய்து மின்சார சபை விசேட சுற்றறிக்கை வெளியிட்டுள்ளதையடுத்து, சுகயீன விடுமுறைக்கு அமைய போராட்டத்தில் ஈடுபடுவோம் என மின்சார சேவை ஊழியர் சங்கத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள மின்சார சபையை மறுசீரமைக்கும் சட்டமூலத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து மின்சார சேவை சங்கத்தினர் மூன்று நாள்கள் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்தனர்.

மின்சார சபையை மறுசீரமைக்கும் வகையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள சட்டமூலத்தின் மொழி பெயர்ப்பில் பல குறைபாடுகள் காணப்படுவதால் மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர சட்டமூலத்தை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவில்லை. திருத்தங்களுடன் சட்டமூலத்தை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பார் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறான பின்னணியில்தான் மின்சார சேவை சங்கத்தினர் மூன்று நாள்கள் போராட்டத்தில் ஈடுபட போகிறோம் என்று அறிவித்தனர்.

# தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக், பொலித்தீனை உற்பத்தி செய்த 180 நிறுவனங்கள் மீது வழக்கு



தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன்களை உற்பத்தி செய்த 180 நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளது என மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட சுமார் 7,146 சோதனைகளையடுத்து, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2018 ஆம் ஆண்டிலிருந்து 37 ஆயிரத்து 181 நிறுவனங்கள் சோதனை செய்யப்பட்டு, 2 ஆயிரத்து 357 நிறுவனங்களின் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கழிவு முகாமைத்துவ பிரிவின் பொறுப்பதிகாரி அஜித் வீரசுந்தர தெரிவித்துள்ளார்.

## நாட்டை மீட்பதற்கான வேலைத்திட்டத்தை உருவாக்குவதற்காக

# சர்வக்கட்சிக் கூட்டத்தை கூட்ட வலியுறுத்துகிறார் மைத்திரிபால



நாட்டை மீட்பதற்கான வேலைத் திட்டத்தை உருவாக்குவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாக சர்வக்கட்சி கூட்டத்தை கூட்ட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

“நாட்டில் பொருள்கள், சேவைகளின் விலைகள் அதிகரித்துள்ளன. மக்கள் மீது பொருளாதார சுமை திணிக்கப்பட்டுள்ளது.

இந்நிலைமையில் இருந்து மக்களை மீட்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். அவ்வாறு இல்லையேல் கடும் அதிருப்தியில் மக்கள் எவ்வாறான முடிவை எடுப்பார்கள் எனத் தெரியவில்லை.

நாட்டை மீட்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளையும் அழைத்து நிலைமையைத் தெளிவுபடுத்த வேண்டும்.

நாட்டை மீட்பதற்கான அரசியல் வேலைத்திட்டமும், ஏனைய தரப்புகளின் வேலைத்திட்டங்களும் முன்வைக்கப்பட்டு காத்திரமான முடிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

எந்தவொரு கட்சியாலும் தனித்து செயற்பட்டு இந்த நாட்டை மீட்க முடியாத சூழ்நிலையே காணப்படுகின்றது.

எனவே, அனைத்து தரப்புகளும் இணைந்து வட்டமேசை பேச்சுவார்த்தையை நடத்தவேண்டும். ஒரு இணக்கமாக தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் மக்கள் மீண்டும் கிளர்ந்தெழுவார்கள். அதனை எவராலும் தடுக்க முடியாது.” – எனத் தெரிவித்தார்.

# மேல், மத்திய மாகாணங்கள் இரண்டிலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் வெற்றி

## பங்களித்தவர்களுக்கு ஜனாதிபதி பாராட்டு





மேல் மற்றும் மத்திய மாகாணங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை வெற்றியளித்துள்ளது.


மேல் மற்றும் மத்திய மாகாணங்களில் டெங்கு ஒழிப்புக்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பிலான மீளாய்வு கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஜனாதிபதி அலுவலகத்தின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலை பின்பற்றி முப்படையினர் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் மேல் மற்றும் மத்திய மாகாணங்களில் டெங்கு தொற்று அதிகமான காணப்படும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டு டெங்கு ஒழிப்பு மற்றும் அதுகுறித்த விழிப்புணர்வு தொடர்பிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன் காரணமாக டெங்கு பரவல் குறிப்பிடத்தக்க அளவில் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் டெங்கு நோய் பரவல் குறித்து கவனம் செலுத்த வேண்டியிருப்பதாகவும், பாடசாலை, வழிபாட்டுத் தலங்கள், பொது இடங்கள், தனியார் நிறுவனங்களை அண்மித்த பகுதிகளில் அதிகளவில் டெங்கு பரவல் காணப்படுவதாகவும் அறியப்பட்டுள்ளது.

அத்துடன், பல்வேறு வேலைத் திட்டங்களின் கீழ் டெங்கு ஒழிப்புக் காக முன்னெடுக்கப்படும் முயற்சிகளுக்கு ஜனாதிபதி பாராட்டுத் தெரிவித்துள்ளார்.



# திருகோணமலையில் உள்ள எண்ணெய் குதங்கள் 50 வருட குத்தகைக்குத் தனியார் நிறுவனத்துக்கு!

திருகோணமலையில் உள்ள 99 எண்ணெய்க் குதங்களில் 61 எண்ணெய்க் குதங்களை திருகோணமலை பெற்றோலிய முனைய தனியார் நிறுவனத்துக்கு 50 வருடகாலத்திற்குக் குத்தகைக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டவாறு இந்த எண்ணெய்க் குதங்களை வழங்கக் கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலை சீனக்குடா துறைமுகத்தில் உள்ள 99 எண்ணெய்த் குதங்கள் மேற்புறத் தாங்கித்திடல் கொண்டுள்ளன. அவற்றில் 61 குதங்களை திருகோணமலை பெற்றோலிய முனைய தனியார் கம்பனிக்கு 50 வருடகாலத்திற்குக் குத்தகைக்கு வழங்குவதற்கு அமைச்சரவையில் வழங்கப்பட்ட அங்கீகாரத்துக்கு எதிராகக் கடுமையான பிரசாரங்கள் கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், தற்போது அந்தத் தீர்மானத்தை அமுல்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டு அவற்றை அபிவிருத்தி செய்வதற்கான சாத்திய வளக் கற்கை உள்ளிட்ட அடிப்படைப் படிமுறைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த சாத்தியவளக் கற்கை மூலம் இக்கருத்திட்டம் 16 ஆண்டுகளில் 07 கட்டங்களாக அபிவிருத்தி செய்வதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதன் முதலாவது கட்டத்தின் கீழ் பொருளாதார ரீதியாகப் பயன்பாடு மிக்க 09 குதங்களை மறுசீரமைப்புச் செய்வதற்கும், கிட்டத்தட்ட 1.75 கிலோமீற்றர் தூர வீதியைப் புனரமைப்பதற்கும், ஏற்புடைய ஏனைய வசதிகளை நிர்மாணிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காக நிர்மாணித்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒப்படைத்தல் எனும் வணிக மாதிரியைப் பின்பற்றுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய, முதலாவது கட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு உத்தேச அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான முதலீட்டாளரைத் தெரிவு செய்வதற்காக, குறித்த பெறுகைச் செயன்முறையைக் கடைப்பிடிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# புத்தளத்தில் மதகுக்குக் கீழ் இருந்து குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்பு

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம், கரம்பை – உடப்பு வீதியின் காமன்ட்வத்தைக்கு செல்லும் வீதியில் உள்ள மதகுக்குக் கீழ் இருந்து குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கரம்பை, தேத்தாப்பொல காமன்ட்வத்தை பகுதியைச் சேர்ந்த உதயகுமார் (வயது 55) எனும் இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்ட நபரின் மனைவி வெளிநாட்டில் தொழில் புரிந்து வரும் நிலையில், இரண்டு பிள்ளைகளையும் தானே பராமரித்து வந்துள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், கடந்த முதலாம் திகதி முதல் இந்த நபர், வீட்டில் இருந்து வெளியேறிச் சென்ற நிலையில் காணாமல் போயுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றிக் குடும்பத்தினர் பொலிஸில் முறைப்பாடு செய்த நிலையில், அவர் நேற்றுப் பிற்பகல் வடிகானுக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மதகுக்குக் கீழ் சடலமொன்று இருப்பதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில், சம்பவ இடத்திற்கு சென்ற நுரைச்சோலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அத்துடன், புத்தளம் தடயவியல் பொலிஸாரும் சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது, சம்பவ இடத்திற்கு வருகை தந்த புத்தளம் மாவட்ட பதில் நீதிவான் எம்.எம்.இக்பால், சம்பவ இடத்தில் நீதிவான் விசாரணையை முன்னெடுத்தமையுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு எடுத்து செல்லுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்ட நபர் மது அருந்தும் பழக்கமுடையவர் எனவும் மதகுக்கு மேல் இருந்து மது அருந்திய நிலையில் இவ்வாறு மதகுக்கு கீழ் செல்லும் நீருக்குள் வீழ்ந்து உயிரிழந்திருக்கலாம் என தாம் சந்தேகிக்கின்றனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த சம்வம் தொடர்பில் நுரைச்சோலை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் டபிள்யூ.எஸ்.பிரேமசிறி தலைமையிலான பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.01.2024

## மேஷம்

உங்களின் சமயோசித புத்தி மற்றும் புத்திசாலித்தனம் காரணமாக இன்று பயனுள்ள பலன்கள் சாத்தியம். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

இன்று நீங்கள் சிறப்பாக செயலாற்று வீர்கள். உங்கள் செயல் திறன் அசர வைக்கும். உங்கள் முயற்சிக்கு மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். குடும்ப பிரச்சினைகளை கலந் தாலோசித்து சுமூகமான தீர்வு காணுவீர்கள்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் தேவை களை பூர்த்தி செய்துகொள்வீர்கள். பூர்வீகசொத்து மூலம் பணவரவு வர வாய்ப்புள்ளது.

உங்கள் நேர்மறை எண்ணம் மற்றும் மனஉறுதி காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர் கள்.

## ரிஷபம்

இன்று அவநம்பிக்கையும் அமைதி யின்மையும் காணப்படும். உங்கள் செயல்களில் கவனம் தேவை. எதிர்மறை எண்ணங்களை தவிர்க்க வேண்டும். நம்பிக்கையுடன் செயல்பட்டால் அதிகம் சாதிக்கலாம்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். பணியில் நீங்கள் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. எனவே புத்திசாலித் தனமாக செயல்பட வேண்டும். உங்கள் சக பணியாளர் களிடம் உரையாடும்போது கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் சகஜமாக நடந்து கொண்டு நட்பான அணுகுமுறை மேற்கொள் ளுங்கள்.

நிதி வளர்ச்சி இன்று ஏமாற்றத்தை அளிக்கும். செலவுகள் அதிகமாக காணப்படும்.

## மிதுனம்

இன்று மிதமான பலன்களே காணப் படும். இன்று செயல்கள் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். சில பணி கள் நிலுவையில் நிற்கும். இன்றைய சவால்களை சந்திக்க சமநிலை போக்கு தேவை.

குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும். நீங்கள் வருத்த மான மனநிலையில் இருப்பீர்கள்.

குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணை யுடன் கருத்து வேறுபாடு எழும். இதனால் முரண்பாடு எழும். இருவரும் பரஸ்பரம் பேசிக் கொள்வதன் மூலம் தீர்வு காணலாம்.

இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். சேமிப்பு உயர்வதற்கான வாய்ப்பு குறைவு.

உங்கள் தாயாருக்கு சிறிய உடல் நலக் கோளாறு காணப்படும்.

## கடகம்

இன்று இனிமையான நாள். உங்க ளுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் செயல்களை எளிதாக முடிப்பீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் அதிர்ஷ்டமான நாள்.

உங்கள் செயல்திறனுக்கு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். உங்கள் பணி களை சிறந்த தரத்துடன் முடித்து தருவீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர் கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கி யிருப்பு உயரும். நீங்கள் இன்று புதிய முதலீடுகளை செய்யலாம். அது லாபகரமாக இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் மன உறுதி காரணமாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

## சிம்மம்

இன்று துடிப்பான நாளாக இருக் காது. இன்று பாதுகாப்பின்மை உணர்வு நிறைந்து காணப்படும். இன்று எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பணியிடத்தில் கூடுதல் பொறுப்புகள் காணப்படும். கவனம் மற்றும் சிறப்பான திட்டம் நல்ல பலன் தரும்.

நீங்கள் உங்கள் துணையுடன் விஷயங்களை தீவிர மாக எடுத்துக் கொள்வீர்கள். இது நிலையான உறவிற்கு நல்லதல்ல. எந்த விஷயத்தையும் லேசாக சாதரணமாக எடுத்துக்கொள்ளுங்கள்.

பணப்புழக்கம் போதிய அளவில் காணப்படாது. இன்று கணிசமான தொகை சம்பாதிக்கும் வாய்ப்பும் குறைவு.

தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மற்றும் யோகா மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியம் ஏற்படும்.

## கன்னி

இன்று சுமூகமான பலன்கள் கிட் டாது.உங்கள் முயற்சிகளில் வெற்றி பெறுவதற்கு நீங்கள் திட்டமிட்டு கடின மாக உழைக்க வேண்டும். இன்று அதிர்ஷ்டம் காணப்படாது.

உங்கள் சக பணியாளர்களின் வளர்ச்சி காரணமாக நீங்கள் பாதுகாப்பற்ற தன்மை உணர்வீர்கள். அவர்கள் பணியில் முன் நிலையில் இருப் பார்கள். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையிடம் பேசும் போது வன்மையாக நடந்து கொள்வீர்கள். பதட்டமில்லாத நல்லுறவை ஏற்ப டுத்த இதனை தவிர்த்தல் வேண்டும்.

இன்று நிதிநிலையில் ஏற்ற இறக்கம் காணப்படாது. பணப் பரிவர்த்தனைக்கான ஆவணங்களை முறையாக பராமரிக்க வேண்டியது அவசியம்.

## துலாம்

இன்று சகஜமாகவும் நகைச்சுவை போக்கும் மேற்கொண்டால் நன்மை ஏற்படும். பிரச்சினைகளை சமாளிக்க இயலும். பிரார்த்தனையில் ஈடுபடுவதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

முறையாக திட்டமிட்டால் பணிகளை சிறப்பாக ஆற்றலாம். அதன் மூலம் வெற்றி காண லாம்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாக இருக்க வேண்டும். நீங்கள் உணர்ச்சிவசப்பட்டு கவன மற்ற வார்த்தைகளை பேச வாய்ப்புள்ளது. இது உறவில் மகிழ்ச்சியைக் கெடுக்கும்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

கண் மற்றும் பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. தகுந்த மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.

## விருச்சிகம்

இன்று வளர்ச்சிக்கும் முன்னேற் றத்திற்கும் சாதகமான நாள். குறைந்த முயற்சியில் அதிக வெற்றி பெறுவீர்கள். இன்று நம்பிக்கை உணர்வுடன் இருப் பீர்கள். இதனால் நன்மை ஏற்படும்.

இன்று முக்கிய சந்திப்புகளில் கலந்து கொள்வதில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் கருத் துக்களை தெளிவாக எடுத்துச் சொல்வீர்கள். இது உங்கள் சகபணியாளர்களுக்கு ஆச்சரியம் அளிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்வீர்கள். இது அவரை மகிழ்விக்கும். எனவே பொதுவாக இருவரிடமும் மகிழ்ச்சி காணப்படும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் ஸ்திரமான ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். தேக ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.01.2024




இன்று சிறந்த பலன்கள் கிடைக்கும். புத்துணர்ச்சியோடு காணப்படுவீர்கள். புதிய முயற்சிகள் இன்று லாபகரமாக இருக்கும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் பணிகளை ஒழுங்காக உற்சாகத்துடன் முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதன் மூலம் அவர் உங்கள் உறவின் மதிப்பை உணரலாம்.

இன்று போதிய அளவு நிதி காணப்படும். உங்கள் பணத் தேவைகள் இன்று பூர்த்தியடைய அது உதவும். நீங்கள் அதிக அளவில் பணம் சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று அனுகூலமான நாளாக இருக்காது சில சமயங்களில் நீங்கள் பொறுமையின்றி காணப்படுவீர்கள். நீங்கள் தைரியம் இழக்கும் வகையில் கடினமான சூழ்நிலை காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் திட்டமிட்டு மிகுந்த கவனத்துடன் செயலாற்ற வேண்டும்.

நீங்கள் அற்ப விஷயங்களைக் கூட பெரிதாக்குவீர்கள். இது உங்கள் உறவில் குழப்பத்தை ஏற்படுத்தும். நீங்கள் உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று பயணத்தின் போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




இன்றைய நாள் சிறந்த பலன் தர சாதகமாக அமையாது. நீங்கள் கடினமாக உழைக்க வேண்டியது அவசியம். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பரபரப்பான பணிச்சூழல் காணப்படும். ஓய்வெடுக்க நேரம் காணாது. இன்று திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

கருத்து வேறுபாடு காரணமாக நீங்கள் உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிக்க தவறுவீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வது சிறந்தது.

இன்று உங்கள் வங்கியில் கணிசமான தொகை பராமரிக்க இயலாது. செலவுகள் காரணமாக கையிருப்பு பணம் கரையும்.

இன்று அமைதியின்றி காணப்படுவீர்கள். இதனால் பதட்டம் ஏற்பட்டு ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று வாய்ப்புகளும் அதிர்ஷ்டமும் நிறைந்த நாள். முக்கிய முடிவுகள் எடுக்க இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரித்துக் காணப்படும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். உங்களிடம் காணப்படும் நம்பிக்கை காரணமாக நீங்கள் உயர்ந்த நிலை அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இது உங்களிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்பட உதவும்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். இதனால் உங்களிடம் திருப்தி காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். இது உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

